**DEPOSITION OF WITNESS**

Judicial form No,53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI

| C.C. 247/2021 | |
|---|---|
| Deposition of Witness for | அ.சா.1/புகார்தாரர் |
| பெயர் | குமாரசாமி |
| தொழில் | |
| தகப்பனார் பெயர் | கருப்ப கவுண்டர் |
| கணவர் பெயர் | |
| கிராமம்: | ஜாதி : |
| தாலூக்கா : | இனம் : |
| மாவட்டம் திருப்பூர் | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969, (Central Act 44 of 1969) on 19.10.2023

Accused Absent. Petition filed u/s 317 Cr.P.C. and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு பனியன் கம்பெனி வைத்து தொழில் வைத்து நடத்தி வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன கங்காதரன் எனது தம்பி ஆவார். கடந்த 01.06.2013 ம் தேதி இரவு 09.30 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது ஆம்புலன்ஸ் டிரைவர் எனது தம்பியின் மொபைலில் இருந்து அழைத்து அவரை ரேவதி மருத்துவமனையில் வைத்திருப்பதாக கூறினார். நான் போய் பார்த்த போது பேச்சு மூச்சு இல்லாமல் இருந்தார். மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் என் தம்பி இறந்துவிட்டதால் அவரது பிரேதத்தை அவினாசி அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்துவிட்டு மறுநாள் காலை அனுப்பர்பாளையம் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். **அந்தப் புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இறந்தவர் என்னுடைய தம்பி என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. தகவல் மூலமாகத்தான் தெரியும். நான் சம்பவத்திற்கு பின்னர் ரேவதி மருத்துவமனைக்கு சென்று தான் பார்த்தேன். புகார் எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் மறுநாள் காலை கொடுத்தேன். என்னுடன் யார் எல்லாம் காவல் நிலையம் வந்தார்கள் என்றால் சுந்தரமூர்த்தி, ரமேஷ் மற்றும் சிலர் சென்றோம். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும், நான் தவறாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

K S SHABEENA Digitally signed by K S SHABEENA Date: 2023.10.19 19:01:57 +0100

நீதித்துறை நடுவர்,
அவிநாசி.

Name of the Interpreter : K.S. Shabeena, Judicial Magistrate, Avinashi

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 19th day of October 2023

K S SHABEENA Digitally signed by K S SHABEENA Date: 2023.10.19 19:02:08 +0100

Judicial Magistrate, Avinashi
Signature of Interpreter.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial form No,53</u>

<u>(See Rule 42)</u>

<u>(Chapter XXIII Code of Criminal Procedure</u>

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI**

| C.C. 247/2021 | |
|---|---|
| Deposition of Witness for | அ.சா.2/கண்ணுற்ற சாட்சி |
| பெயர் | பாலசுப்பிரமணியம் |
| தொழில் | |
| தகப்பனார் பெயர் | பழனிச்சாமி கவுண்டர் |
| கணவர் பெயர் | |
| கிராமம்: அய்யம்பாளையம் | ஜாதி : |
| தாலூக்கா : அவினாசி | இனம் : |
| மாவட்டம் திருப்பூர் | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969, (Central Act 44 of 1969) on 19.10.2023

Accused Absent. Petition filed u/s 317 Cr.P.C. and allowed.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு பனியன் கம்பெனி வைத்து தொழில் வைத்து நடத்தி வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 09.00–09.15 மணியிருக்கும். நான் அனுப்பர்பாளையம் சென்று விட்டு மோட்டார் எடுத்துக் கொண்டு பூண்டி பாலத்திற்கு முன்பு கூட்டுறவு பேங்க் அருகே வந்து கொண்டிருந்தேன். கருமத்தம்பட்டி செல்லும் டவுன் பஸ் என்னை ஓவர்டேக் செய்து போனது. போன பஸ் ஒரு பைக்கின் மீது மோதிவிட்டது. நான் போய் பார்த்த போது, அதில் வந்த நபருக்கு அடிப்பட்டிருந்தது. கூட்டமாகிவிட்டது. பஸ்சை ஓரங்கட்டி நிறுத்திவிட்டார்கள். ஆம்புலன்ஸ் வந்து காயம்பட்ட நபரை எடுத்துச் சென்றது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.</u>**

**சாட்சியின் கையொப்பம்**

| |
|---|
| **சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.**<br>K S SHABEENA Digitally signed by K S SHABEENA Date: 2023.10.19 19:02:17 +0100<br>**நீதித்துறை நடுவர்,**<br>**அவிநாசி.** |

Name of the Interpreter : K.S. Shabeena, Judicial Magistrate, Avinashi

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 19th day of October 2023

K S SHABEENA Digitally signed by K S SHABEENA Date: 2023.10.19 19:02:29 +0100

Judicial Magistrate, Avinashi

Signature of Interpreter.

**DEPOSITION OF WITNESS**

Judicial form No,53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI**

| C.C. 247/2021 | |
|---|---|
| Deposition of Witness for | அ.சா.3/பார்வை மகஜர் சாட்சி |
| பெயர் | பழனிச்சாமி |
| தொழில் | |
| தகப்பனார் பெயர் | ராமன் |
| கணவர் பெயர் | |
| கிராமம்: சேயூர் | ஜாதி : |
| தாலூக்கா : அவினாசி | இனம் : |
| மாவட்டம் திருப்பூர் | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969, (Central Act 44 of 1969) on 19.10.2023

Accused Absent. Petition filed u/s 317 Cr.P.C. and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு வேலைக்கு செல்வதற்காக பூண்டி பாலம் அருகே காலை 07.00 மணிக்கு போன போது போலீசார் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். தாங்கள் அங்கு படம் வரைவதாகவும், அதற்கு சாட்சியாக இருக்க வேண்டும் என்று கேட்டார்கள். அவர்கள் படம் வரைந்து எழுதிக் கொண்ட பின்பு நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்தப் பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையெழுத்து செய்தேன். என்னுடன் வேறு யார் கையொப்பம் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. எனக்கு படிக்கத் தெரியாது. போலீசார் எழுதியதில் நான் கையொப்பம் செய்தேன். போலீசார் சம்பவ இடத்திலிருந்து ஏதேனும் பொருட்களை கைப்பற்றினார்களா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் பார்க்கவில்லை. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் செய்தேன் என்றும் நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

K S SHABEENA Digitally signed by K S SHABEENA Date: 2023.10.19 19:02:41 +0100

நீதித்துறை நடுவர்,
அவிநாசி.

Name of the Interpreter : K.S. Shabeena, Judicial Magistrate, Avinashi

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 19th day of October 2023

K S SHABEENA Digitally signed by K S SHABEENA Date: 2023.10.19 19:02:54 +0100

Judicial Magistrate, Avinashi
Signature of Interpreter.